(3)

10 Rs.



752/7-57

K. G. அனந்தகோபு எழுதினார்

கோவை 9

P. KANDASWAMY, S.V
DISTRICT COURT TIR...
T. NADU, S...

In the Court of the ~~Judge of Salem~~

Prl District Munsif of Salem

O.S. 935 of 1996

This Non-Judicial Stamp paper to th... of Rs 10/- is the 1st sheet of th... certified copy of ~~Final decree~~ attached and duly cancelled as per High Court's circular P.Dis. No. 636 of 1936.

Superintendent.

In the Court of the Prl. District Munsif / ~~Sub Judge~~, Salem.

~~A. S.~~ / O. S. No. 935 of 1996

Ramakrishnan & others — Plaintiffs / Appellants

Vs.

Sornammal & others — Defendants / Respondents

Valuation of immovable properties for the purpose of Court Fees :-


Sec & Sub. Sec. of Act.	Nature of Suit	Annual Revenue or rent payable	Market Value	Value for purposes of C. Fee.
		Rs.	Rs.	Rs.
37 (2) of the C.F. Act.	Suit for partition			

/ True copy / By order

Superintendent.

...uppusamy
...sel for plaintiff

...Sankaran
...tendent / ~~Sheristadar.~~



முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்.

முன்னிலை: திரு கே.முரளி சங்கர், பி.எல்., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

1997ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை.

அசல் வழக்கு எண்.935/1996.

1.பி.வி.ராமகிருஷ்ணன், த/பெ.வீரப்பப்பிள்ளை இருப்பிடம் கதவு எண் 85, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிப்பாளையம், சேலம்-15. 2.நித்தியப்பிரியா, த/பெ.பி.வி.ராமகிருஷ்ணன், கதவு எண்.85, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிப்பாளையம், சேலம்-15. 3.மைனர் ஸ்ரீனோஜினி, த/பெ.வி.பி.ராமகிருஷ்ணன், கதவு எண்.85, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிப்பாளையம், சேலம்-15; 3ம் மைனருக்கு அடுத்தசினேகிதர் தகப்பனார் பி.வி.ராமகிருஷ்ணன்.

..மனுதாரர்கள்/வாதிகள்.


/எதிராக/

1.வி.சொர்ணாம்பாள், த/பெ.வீரப்பப்பிள்ளை, டோர் நெம்பர் 85, சன்னியாசிகுண்டுரோடு, கிச்சிப்பாளையம் சேலம்-15. 2.சரஸ்வதி, த/பெ. சுரைசாமிபிள்ளை, 1/83, எஸ்.இ.டி.காலனி, அழகாபுரம், சேலம்-16. 3.கே.ராஜம், த/பெ.கந்தசாமி, 61, திருநாவுக்கரசு ரோடு, கிச்சிப்பாளையம், சேலம்-15. 4.பி.வி.பாலசுப்ரமணியம், த/பெ.வீரப்பப்பிள்ளை இருப்பிடம் 84, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிப்பாளையம், சேலம்-15. 5.செந்தில்குமார், த/பெ.பி.வி.பாலசுப்ரமணியம், 84, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிப்பாளையம், சேலம்-15. 6.மைனர் விஜயகுமார், த/பெ.பி.வி.பாலசுப்ரமணியம், 84, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிபாளையம், சேலம்-15. 7.மைனர் மணிகண்டன், த/பெ. பி.வி.பாலசுப்ரமணியம், 84, சன்னியாசிகுண்டு ரோடு, கிச்சிபாளையம், சேலம்-15.

6 முதல் 7 பிரதிவாதிகளுக்கு அடுத்த சினேகிதர் 4ம் பிரதிவாதி பி.வி.பாலசுப்ரமணியம். காவா தாக்கல் செய்த தேதி:25.1.1994. காவா மதிப்பு ரூ.30,000/-. வழக்கு மூலம் எழுந்த நாள்:20.12.60, 15.11.92. 20.1.94.

175/S.mab

1ம் பக்கம்திருத். சேர்.



நீதிமன்ற கட்டணம் செலுத்தியது ரூ.200.50.

தாவா சொத்தை 5 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகம் வாதிகளின் சுவாதீனத்திற்கு ஒதுக்கவும், மேற்கூறப்பட்டவாறு பாகப்பிரிவினை ஏற்படுத்தும் பொருட்டு ஆணையர் நியமனம் கோரியும், ஒதுக்கப்பட்ட பாகத்தின் தனி சுவாதீனம் கொடுக்குமாறு வாதிகள் தாவா தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கு என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்-பட்டு, வாதிகள் தரப்பில்திரு கே.குப்புசாமி, வழக்கறிஞர் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் திரு எஸ்.நரசிம்மன், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகி, இருதரப்பினர்கள் ராஜி செய்து கொண்டு தாக்கல் செய்த ராஜினாமா மனுவின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்


தீர்ப்பாணை

1. தாவா இரண்டாவது அயிட்டமாக கண்டதில் ஓர் பகுதியானதும் இணைடியில் 'ஏ' ஷெடியூலில் விவரிக்கப்பட்டுள்ளதுமான ரூ.30,000/-மதிப்புள்ளதும், இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளபிளான் எண்.1ல் சிகப்பு வண்ணம் தீட்டப்பட்ட பகுதியுமான சொத்தை வாதிகள் தானாதி வினியோக விக்கிரயங்களுக்குஅருகராய் சர்வ சுதந்திரமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்றும், 4-7 பிரதிவாதிகள் வாதிகளுக்கு அவர்களின் பாக ஈட்டுக்காக ரொக்கமாக ரூ.35,000/-செலுத்த வேண்டுமென்றும், 3ம் பிரதிவாதி பாக ஈட்டுக்காக அவருக்கு வாதிகள் ரூ.15,000/-செலுத்த வேண்டியதென்றும்,

2. தாவா 1வது அயிட்டமானதும் ரூ.75,000/- மதிப்புள்ளதும் இம்மனுவில் 'பி' ஷெடியூலில் விவரிக்கப்பட்டுள்ளதுமான சொத்தையும், தாவா 2வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தில் இம்மனுவில் 'ஏ' ஷெடியூலாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கு வடபுறமாக உள்ள டோர் நெம்பர் 85ல் கண்ட கட்டிடம் ரூ.25,000/- மதிப்புள்ளதுமான சொத்தையும் 4-7 பிரதிவாதிகள் அடைந்து தானாதிவினியோக..

175/S.mar

2-ம் பக்கம் பிறகு பார்க்க



வித்தியாசங்களுக்குஅருகராய் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அடைந்து கொள்ள வேண்டியதுஎன்றும், 4-7 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதிக்கு அவர் பாக ஈட்டுக்காக ரூ.15,000/- செலுத்திவிட வேண்டிய என்றும்,

3. தாவா 3வது அயிட்டமாக கண்டதும், இம்மனுவில் 'சி' டெடியூலாக கண்டமான ரூ.10,000/- மதிப்புள்ள 5 பவுன் தங்க நகைகளையும் தாவா 4வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ளமான ரொக்கம் ரூ.10,000/-ஐயும் 1ம் பிரதிவாதி சர்வ சு சுதந்திரமாக அடைய வேண்டிய என்றும்,

4. 1ம் பிரதிவாதியான சொர்ணாம்மாள் தன் ஆயுள்காலம் வரையிலும் தன் இரு குமாரர்களான 1ம் வாதி மற்றும் 4ம்பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களில் அவர்விருப்பப்படி இருந்து வர உரிமையுண்டு என்றும்;

5. பஞ்சாயத்தார் செய்த பைசல்படி பாகம் பிரித்துக் கொடுத்தவாறு அடைந்து இருப்பதால் இனி பாகப்பிரிவினை செய்ய வேண்டிய சொத்து எதுமில்லை, பாக சொத்துக்கள் ஏற்றதாழ்வு என்று எவரும் தகராறு செய்யக்கூடாது என்றும்,

6. எவராவது ஒருவர்மற்ற பாகஸ்தருக்கு தெரியாமல் கடன் ஏதாவது வாங்கி இருந்தால் அதை கடன் பட்டவரே கட்டி தீர்த்துக் கொள்ள வேண்டிய என்றும், அதுமற்ற பாகஸ்தர்களையோ, அவரது சொத்தையோ கட்டுப்படுத்தாது என்றும்,

7. ஒரு பாகஸ்தருக்கு பிரிந்த சொத்தில் மற்ற பாகஸ்தர்கள் எவருக்கும் எவ்விதஉரிமையுமில்லை என்றும், அவ்வாறு உள்ள பாத்தியங்களை எல்லாம் ஒவ்வொரு பாகஸ்தர்களும் ரிலீங்குவிட்டுச் செய்து விட்டார்கள் என்றும், சொத்தின் கார்ப்பரேசன் வரி, குடிதண்ணீர் இணைப்பு, பட்டா மற்றும் அரசாங்க ரிக்கார்டுகளை சொத்தை அடைவோர் மாற்றிக் கொள்ள வேண்டிய என்றும், அதைமற்ற பாகஸ்தர்கள் எவ்விததடையும் செய்யக்கூடாது என்றும் தீர்ப்பாணை பிறப்பித்து உத்திரவிடப்படுகிறது.

8. பிரதிவாதிகள் தங்களது பாகத்திற்காக நீதிமன்ற கட்டணம் ரூ.400/-..

125/S. Mark

3-ம் பக்கம் பார்க்க

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1 ரூபாய்
१ रुपया
1 Re.
COPY STAMP

செலுத்தியுள்ளார்கள்.

9. இந்த இணைநிலை சீர்ப்பாணை ரூ. 4000/-மதிப்புள்ள நீதித்தாள் நாராயணன் முன்னிலையில் தயாரிக்கப்பட்டுள்ளது.


10. ராஜினாமா மனுவும், வரைபடங்களும் இந்த சீர்ப்பாணையின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது.

Terms of compromise

1. தாவா இரண்டாவது அயிட்டமாக கண்டதில் ஒர் பகுதியானதும் இதனடியில் 'எ' ஒெடியூலில் விவரிக்கப்பட்டுள்ளதுமான ரூ.30,000/-(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மதிப்புள்ளதும் இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளபிளான் 1ல் சிகப்பு வண்ணம் தீட்டப்பட்ட பகுதியுமானதும் வாதிகளுக்கு பிரிந்துள்ளதுமான சொத்தை வாதிகள் பாகத்துக்கு அடைந்து தானாதி வினியோக விக்கிரயங்களுக்குஅருகராய் சர்வ சுதந்திரமாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்றும், 4-7 ம் பிரதிவாதிகள் வாதிகளுக்குஅவர்களின் பாக ஈட்டுக்காக ரொக்கமாக ரூ.35,000/-(ரூபாய் முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலுத்திவிட வேண்டியதென்றும், 2ம் பிரதிவாதிக்கு 4-7 பிரதிவாதிகள், பாக ஈட்டுக்காக அவருக்கு ரூ.15,000/-ரூபாய் பதினைந்-தாயிரம் மட்டும்)யும் செலுத்த வேண்டியது என்றும் வாதிகள் 3ம் பிரதிவாதிக்கு பாக ஈட்டுக்காக ரூ.15,000/-(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) செலுத்த வேண்டியது என்றும்,

2. தாவா 1வது அயிட்டமானதும் ரூ.75,000/-மதிப்புள்ளதும் இம்மனுவில் 'பி' ஒெட்யூலில் விவரிக்கப்பட்டுள்ளதுமான சொத்தையும், தாவா இரண்டாவது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்தில் இம்மனுவில் 'எ' ஒெடியூலாக காட்டப்பட்டுள்ள சொத்துக்கு வடபுறமாக உள்ள டோர் நெம்பர் 85 கண்ட கட்டிடம் ரூ.25,000/-மதிப்புள்ளதுமான சொத்தையும் 4-7 பிரதிவாதிகள் அடைந்து தானாதி வினியோக விக்கிரயங்களுக்கு அருகராய் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அடைந்து கொள்ள வேண்டியது என்றும், 4-7 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதிக்கு அவர் பாக..

175/KS.mah



சட்டுக்காக ரூ.15,000/-ம்(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) செலுத்திட வேண்டிய என்றும், 3ம் பிரதிவாதி பாக சட்டுக்காக அவருக்கு வாதிகள் ரூ.15,000/-(ரூபாய் பதினைந்தாயிரம்/மட்டும்) செலுத்திட வேண்டிய என்றும் அதை அவர்கள் சர்வ சுதந்திரமாக அடைய வேண்டிய என்றும்,

3. தாவா 3வது அயிட்டமாக கண்டதும் இம்மனுவில் 'சி' ஷெடியூலாக கண்டமான ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மதிப்புள்ள 5 பவுன் நிறைகள்ள நகைகளையும் தாவா 4வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ளதுமான ரொக்கம் ரூ.10,000/-ஐயும் 1ம் பிரதிவாதி சர்வ சுதந்திரமாக அடைய வேண்டியதுஎன்றும்,

4. 1ம் பிரதிவாதியான சொர்ணம்மாள் தன் முழு ஆயுட்காலம் வரையிலும் தன் இரு குமாரர்களான 1ம் வாதிமற்றும் 4ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துகளில் அவர் விருப்பப்படி இருந்து வர உரிமையுண்டு என்பதைஅனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள்.


5. மேற்கண்டவாறு உபயவாதிகள் தாவா சொத்துக்களை பஞ்சாயத்தார் செய்தபைசல்படி பாகம் பிரித்து கொடுத்தவாறு அடைந்து இருப்பதால் இனி பாகப்-பிரிவினை செய்ய வேண்டிய சொத்து ஏதுமில்லை. பாக சொத்துக்குறிப்புகள் ஏற்ற தாழ்வு என்று நம்மில் எவரும் கிளைம் செய்யக்கூடாது என்றும்,

6. உபயவாதிகள் எவரும் எவ்வித கடனும் வாங்கவில்லை என்றும், எவராவது ஒருவர் மற்ற பாகஸ்தருக்குதெரியாமல் கடன் ஏதாவது வாங்கி இருந்தால் அதை கடன் பட்டவரே கட்டி தீர்த்துக் கொள்ள வேண்டிய என்றும் அது முத்தி மற்ற பாகஸ்தர்களையோ அவரது சொத்தையோ கட்டுப்படுத்தாது என்றும்,

7. ஒரு பாகஸ்தருக்குபிரிந்த சொத்தில் மற்ற பாகஸ்தர்கள் எவருக்கும் எவ்வித உரிமையுமில்லை. அவ்வாறு உள்ள பாத்தியங்களை எல்லாம் ஒவ்வொரு பாகஸ்தர்களும் ரிலிங்குயிஷ் செய்து விட்டார்கள். சொத்தின் கார்ப்பரேஷன் வரி, குடிநீர்வரி இணைப்பு, பட்டா மற்றும் அரசாங்க ரிக்கார்டுகளை சொத்தை அடைவோர் மாற்றிக் கொள்ள வேண்டிய.

175/S.Mark

5-ம் பக்கம் பார்க்க.



அதை மற்ற பாகஸ்தர்கள் எவ்வித தடையும் செய்யக் கூடாது.


'ஏ' ஷெட்யூல்

வாதிகளுக்கு பிரிந்த பாக சொத்து:

சேலம் டி, சேலம் சப்டி, சேலம் டவுன் எப் டிவிஷன் 4வது வார்டு கிச்சிப்பாளையம், சன்னியாசிகுண்டு ரோடு, வடபுரம் ஸ்ரேணியில், மேற்படி தெருவிற்-கும் வடக்கு, பவலம்பாள் வீட்டுக்கும் தெற்கு, நடராஜன் மற்றும் பத்மா, நாராயணன் மற்றும் மதுராலட்சுமி ஆகியவர்களுக்குப் பாத்தியப்பட்ட வீடுகளுக்கும் கிழக்கு, டவுன் சர்வே நெம்பர் 91க்கு சம்மந்தப்பட்ட தென்வடல் பொது சந்திற்கும், மேற்கு, இதன் மத்தியில் தென்புரம் கிழமேலடி 20' 6"(இருபது அடி, ஆறு அங்குலம்) வடபுறம் கிழமேலடி 20 அடி இருபது அடி, கிழபுரமும், மேற்குபுரமும், தென்வடலடி 73 அடி(எழுபத்தி மூன்று அடி) இந்தளவுள்ள A அடி நிலம் பூராவும் இதில் கட்டியிருக்-கும் வில்லை கட்டிட வகையறாக்கள் பூராவும் இவைகளிலிருக்கும் இரண்டு முனிசிபல் பைப்பு கனைக்ஷன் சகிதமும் இவைகளிலிருக்கும் மின்சார இணைப்புகள் சகிதமும் இந்த சொத்தின் கழிவுநீர், மழைநீர், கூரைநீர், வகையறாக்கள் இந்த சொத்தின் கிழபுரமுள்ள பொது வந்தில் உள்ள டிச்சியின் வழியாக ஏற்கனவே மெயின் ரோடிற்கு சென்று கொண்டிருப்பதைப் போலவே இனியும் போய் கொண்டிருக்க வேண்டியது. மேற்படி சொத்துக்களின் நான்குபுறம் சுவர்களின் அடிநிலங்களும், சுவர்களும், சொந்த பாத்தியமும் இதற்கு டோர் நெம்பர்கள்84, டவுன் சர்வேநெம்பர்1068, பிரி வரிவிதிப்பு நெம்பர்60714, மற்றும் டோர் நெம்பர் 85 டவுன் சர்வே நெம்பர்1068. வரிவிதிப்பு நெம்பர்60715 மேற்படி சொத்துக்கள் சர்வேயண்டு செட்டில்மெண்ட் படி வார்டு 'ஜே' பிளாக் 9, புதிய சர்வே நெம்பர்கள் 89, பூராவும், 90 பூராவும் ஆக இவைகள் பூராவிலும், வாதிகளுக்கு அவர்கள் பாகத்-திற்கு பிரிந்துள்ள சொத்தாகிய மேற்படி சன்னியாசிகுண்டு ரோடு வடபுரம் ஸ்ரேணியில் மேற்படி ரோட்டுக்கும் வடக்கு, சர்வே நெம்பர் 91க்கு சம்மந்தப்பட்ட தென்வட-லாக செல்கின்ற பொது சந்திற்கும் மேற்கு, நாராயணன் மற்றும் மகாலட்சுமி...

175/S.Mal

6ம் பக்கம் பிரித்து சேர்.



ஆகியவர்களுக்குப் பாத்தியப்பட்ட வீட்டுக்கும் கிழக்கு 4 முதல்7 வரை லக்கமிட்டவர்-களாக பிரதிவாதிகளுக்கு அவர்கள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகம் சாத்திக்கும் தெற்கு, இதன் மத்தியில் மேற்படி சன்னியாசிகுண்டு ரோட்டிற்கு ஒட்டினாற்போல் வடபுரத்தில் தென்வடலடி 38' அடி, கிழமேலடி தென்புரம் 20' 6" வடபுரம் கிழமேலடி 20' 3" இந்தவளுள்ள அடிமனை நிலம் பூராவும் இதில் கட்டி-யிருக்கும் வில்லை வீடும், இதிலிருக்கும் மின்சார இணைப்பும், குடிநீர் இணைப்பும், நான்குபுரம் சுவர்களும் அடிநிலங்களும் சொந்த பாத்தியமும் இந்த சொத்தின் கழிவு நீர் வகையறாக்கள் இதன் கிழபுரமுள்ள தென்வடல் பொது சந்தின் வழியாக ரோட்-டிலுள்ள டிச்சியில் விழும் பாத்தியமும் மேற்படி இத பொது சந்தில் உபோக வர தடம் நடைபாதை பாத்தியமும் இதற்கு வரி ரசீது படி டோர் நெம்பர் 84 சர்வே நெம்பர் 1068 வரிவிதிப்பு நெம்பர் 60714 இந்த சொத்து சர்வே செட்டில்-மெண்ட் படி வார்டு 'ஜே' பிளாக் 9, புதிய சர்வே நெம்பர்90ல் பாகம் 1 முதல் 3 வரை லக்கமிட்ட வாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ.30,000/- இந்த சொத்தின் இம்மனுவில் இணைக்கப்பட்டுள்ள பிளான் நெ.1ல் 'சிகப்பு' வர்ணத்தில் காட்டப்பட்டுள்ளது.

'பி' ஷெட்யூல்

4-7 பிரதிவாதிகளுக்கு பிரிந்த பாக சொத்துக்கள்:

சேலம் டி, சேலம் சப்டி, சேலம் டவுன், 'ஜி' டிவிஷன் 8வது வார்டு, பஜார் கடைவீதி மற்றும் தற்போது வரி ரசீதுபடிக்கு பஜார் தெரு வடபுரம் ஸ்ரேணியில் மேற்படி தெருவிற்கும் வடக்கு, ஏ.எஸ்.பி.சிதம்பைய செட்டியார் கட்டிடங்களுக்கும் தெற்கு, மேற்கு, ~~கிழக்கு~~ ஏ.கே.பாலமுனியப்ப செட்டியார் & சன்ஸ்க்கு பாத்தியப்பட்ட கட்டிடத்திற்கும் கிழக்கு, இதன் மத்தியில் கிழபுரமும், மேற்குபுரமும் உள்ள தென்வடல் சுவர்களும் அவைகளின் அடிநிலங்களும் பூராவும் உள்பட தென்புரம் கிழமேலடி 9 அடி(ஒன்பது அடி) வடபுரம் கிழமேலடி 6' 9"(ஆறு அடி, ஒன்பது அங்குலம்) கிழபுரம்..

175/S.Mal

7ம்பக்கம்திருத்.சேர்.


ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1 ரூபாய்
१ रूपया
1 Re.
COPY STAMP
ایک روپیہ

தென்வடலடி 79 அடி(எழுபத்தி ஒன்பது அடி) மேற்குபுரம் தென்வடலடி கெற்கிலிருந்து வடக்காக 49' 6"(நாற்பத்தொன்பது அடி ஆறு அங்குலம்) அதிலிருந்து வடக்காக சந்து கிராசாக 30 அடி(முப்பது அடி) ஆக மேற்குபுரம் தென்வடலடி 79' 6" (எழுபத்தொன்பது அடி, ஆறு அங்குலம்) இந்த அளவுள்ள 515 சதுரடி அளவுள்ள அடிநிலம் பூராவும் இவைகளில் கட்டியிருக்கும் ஆர்.சி.சி. கார்சு மற்றும் ஏ சி சி சிமெண்ட் உபோட் கட்டிட வகைறாக்கள் பூராவும் மேற்படி சொத்தின் நான்குபுரம் சுவர்களும் அவைகளில் அடிநிலங்களும் பூராவும் சொந்த பாத்தியமும் இதில் இணைத்-திருக்கும் சகலவிதமான மின்சார இணைப்பும் சேர்ந்த தான் இதற்கு பழைய டோர் நெம்பர் 167 புதிய டோர் நெ.161 சர்வே நெ.529 ந சொத்து சர்வே அண்டு செட்டில்மெண்ட் படி வார்டு 'எல்' பிளாக் 6 டவுன் சர்வே நெம்பர் 54 ஆகும். மதிப்பு ரூ.75,000/-(ரூபாய் எழுபத்தி ஐந்து ஆயிரம் மட்டும்) இந்த சொத்து பிளாக் எண்.2க்கு சம்மந்தப்பட்டது. இதன் மதிப்பு ரூ.75,000/- இதுவும்.

இம்மனுவில் 'எ' தெபடியூலில் மேற்படி சன்னியாசிகுண்டு ரோட்டில் காட்டப்-பட்டுள்ள 1 முதல் 3 வரை வாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்திற்கு சேர்ந்தாற்போல் வடபுரமுள்ள சொத்தாகிய வாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாக சொத்திற்கும் வடக்கு, பவளாம்பாள் வீட்டிற்கும் தெற்கு, நடராஜன் மற்றும் பத்மா ஆகியவர்களின் வீட்டுக்கும் கிழக்கு சர்வே நெம்பர் 91க்கு சம்மந்தப்பட்ட தென்வடலாக செல்கின்ற பொது சந்திற்கும் மேற்கு இதன் மத்தியில் தென்புரமும் வடபுரமும் கிழமேலடி 20 அடி தென்வடலடி கிழபுரமும், மேற்குபுரமும் 35 அடி இந்தளவுள்ள அடிநில நிலம் பூராவும் இதில் கட்டியிருக்கும் வில்லை வீடும் இதிலிருக்கும் மின்சார இணைப்புகளும், குடிநீர் இணைப்பும், நான்குபுரம் சுவர்களும், அடிநிலங்களும் சொந்த பாத்தியமும் இந்த சொத்தின் கழிவுநீர் வகையறாக்கள் இதன் கிழபுரமுள்ள..

175/S.mf

8ம் பக்கம்பிருத்.சேர்.



தென்வடல் பொது சந்தின் வழியாக நோட்டிலுள்ள டிச்சியின் விழும் பாத்தியமும் இந்த சொத்திலிருக்கும்மேற்படி தென்வடல் பொது சந்தின் வழியாக மேற்படி சன்னியாசிகுண்டுக்கு போகவும், வரவும் நடம் வழிநடை பாத்தியமும் இதற்கு டோர் நெம்பர் 85 சர்வே நெம்பர்1068 வரிவிதிப்பு எண்.60715 இந்த சொத்து சர்வே செட்டில்மெண்ட் படி வார்டு 'ஜே' பிளாக் 9 புதிய சர்வே நெம்பர்கள் 89 முராவும் மற்றும் 90ல் பாகம் இதன் மதிப்பு ரூபாய் 25,000.00 4முதல் 7 வரை லக்கமிட்ட பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூபாய் 1,00,000.00 இந்த சொத்துக்கள் இம்மனுவில் இணைக்கப்பட்டுள்ள பிளான் நெ.1ல் 'நீல' வர்ணத்திலும், பிளான் நெ.2ல் 'நீல' வர்ணத்திலும் காட்டப்பட்டுள்ளன.

'சி' ஒதுக்கீடு 1ம் பிரதிவாதிக்கு பிரிந்த சொத்து விவரம்

1. 5 பவுன் தங்க நகைகள் மதிப்பு	ரூ.	10,000.00
2. ரொக்கம்.	ரூ.	10,000.00
மொத்தம்	ரூ.	20,000.00

'டி' ஒதுக்கீடு 2ம் பிரதிவாதி சொத்து விவரம்

'பி' ஒதுக்கீடு 4 பாகஸ்தர்கள் 4-7 பிரதிவாதிகளிடமிருந்து 2ம் பிரதிவாதி பெறும் தொகை.	ரூ.	15,000.00

'இ' ஒதுக்கீடு 3ம் பிரதிவாதி பாக சொத்து விவரம்


'ஏ' ஒதுக்கீடு பாகஸ்தர்கள் வாதிகளிடமிருந்து 3ம் பிரதிவாதி பெற்ற ரொக்கம்	ரூ	15,000.00

ஒவ்வொரு பாகஸ்தர்களின் பாக மதிப்பு விவரம்

வாதிகள் பாகத்துக்கு பிரிந்த 'ஏ' ஒதுக்கீடு சொத்து மதிப்பு	ரூ	30,000.00
வாதிகள் 4-7 பிரதிவாதிகளிடமிருந்து பாக ஈட்டுக்காக பெறும் தொகை	ரூ.	35,000.00
மொத்தம்	ரூ.	65,000.00

175/S.Mark

9ம் பக்கம்பார்க்க.



இதில் வாதிகள் 3ம் பிரதிவாதிக்கு பாக ஈட்டுக்காக மொத்தம் கொடுக்கும் ரொக்கம் — ரூ.65,000.00
— ரூ.15,000.00

ஆக வாதிகளின் பாக நிகர மதிப்பு — ரூ.50,000.00

1ம் பிரதிவாதி பாக மதிப்பு:

காவா 3-வது அயிட்ட தங்க நகை மதிப்பு — ரூ.10,000.00
காவா 4-வது அயிட்ட ரொக்கம் — ரூ.10,000.00

மொத்த மதிப்பு — ரூ.20,000.00

2-ம் பிரதிவாதி பாக மதிப்பு

2ம் பிரதிவாதி 4-7 பிரதிவாதிகளிடமிருந்து பாக ஈட்டுக்காக பெறும் ரொக்கம் — ரூ.15,000.00

3-ம் பிரதிவாதி பாக மதிப்பு

3ம் பிரதிவாதி வாதிகளிடமிருந்து பாக ஈட்டுக்காக பெறும் ரொக்கம் — ரூ.15,000.00

4-7 பிரதிவாதிகள் பாகத்திற்கு பிரிந்த சொத்துக்களின் மதிப்பு:

காவா 1வது அயிட்டத்தின் சொத்து மதிப்பு — ரூ.75,000.00

காவா 2வது அயிட்டத்தில் 4-7 பிரதிவாதிகள் பெறும் சொத்து மதிப்பு — ரூ.25,000.00

இவைகள் ராஜி னாமா மனுவில் 'பி' டெஸ்டூலாக காட்டப்பட்டுள்ளது. அவற்றின் மொத்த மதிப்பு — ரூ.1,00000.00

இதில் 4-7 பிரதிவாதிகள் வாதிகள் பாக ஈட்டுக்காக வாதிகளுக்கு கொடுக்கும் ரொக்கம் — ரூ.35,000.00

இதில் 2ம்பிரதிவாதிக்கு பாக ஈட்டுக்காக 4-7 பிரதிவாதிகள் கொடுக்கும் ரொக்கம் — ரூ.65,000.00
— ரூ.15,000.00

4-7 பிரதிவாதிகளுக்கு பிரிந்த சொத்துக்களின் நிதி நிகரமதிப்பு — ரூ.50,000.00


Description of property (in plaint).

அயிட்டம் 1:- சேலம் டி, சேலம் சப்டி, சேலம் டவுன், 'ஜி' டிவிஷன்

8வது வார்டு...

125/s.mark

10-ம் பக்கம் திருத்தி கொள



பஜார் கடைவீதி தற்போது வரி விதி ரசீதுபடிக்கு பஜார் தெரு வடபுரம் ஸ்ரேணியில் மேற்படி தெருவிற்கும் வடக்கு ஏ.எஸ்.பி.அந்தையா செட்டியார் கட்டிடங்களுக்கும் தெற்கும் மேற்கு, ஏ.கே.பாலசுப்பிரமணிய செட்டியார் & சன்ஸ்க்கு பாத்தியப்பட்ட கட்டிடத்திற்கும் கிழக்கு இதன் மத்தியில் கிழபுரமும், மேற்குபுரமும், உள்ள தென்வடல் சுவர்கள், அவைகளின் அடிநிலங்களும் பூராவும் உள்பட தென்புரம் கிழமேலடி 9 அடி(ஒன்பது அடி) வடபுரம் கிழமேலடி 6' 9" (ஆறு அடி ஒன்பது அங்குலம்) கிழபுரம் தென்வடலடி 79 அடி(எழுபத்தொன்பது அடி) மேற்குபுரம் தென்வடலடி தெற்கிலிருந்து வடக்காக 49' 6"(நாற்பத்தொன்பது அடி ஆறு அங்குலம்) அதிலிருந்து வடக்காக சற்று கிராசாக 30 அடி(முப்பது அடி). ஆக மேற்குபுறம் தென்வடலடி 79'-6" (எழுபத்தொன்பது அடி ஆறு அங்குலம்) இந்த அளவுள்ள 595 சதுரடி அளவுள்ள அடிநிலம் பூராவும், இதில் கட்டி இருக்கும் ஆர்.சி.சி.கார்சு மற்றும் ஏ.சி.சி.சிமெண்ட் உஷீட் கட்டிட வகைறாக்கள் பூராவும் சொந்த பாத்தியமும் இதில் இணைந்திருக்கும் சகலவிதமான மின்சார இணைப்புகளும் சேர்ந்ததான் இதற்கு பழைய டோர் நெம்பர் 167 A புதிய டோர் நெம்பர்கள் 161, சர்வே நெ.529 மேற்படி சொந்த சர்வே அண்டு செட்டில்மெண்ட்படி வார்டு 'எல்' பிளாக் 6 டவுன் சர்வே நெம்பர் 54 ஆகும்.

அயிட்டம் நெம்பர் 2:- சேலம் டி, சேலம் சப்டி, சேலம் டவுன் எப் டிவிஷன் 4வது வார்டு கிச்சிப்பாளையம், சன்னியாசிகுண்டு ரோடு, வடபுரம் ஸ்ரேணியில் மேற்படி தெருவிற்கும் வடக்கு, பவளம்பாள் வீட்டுக்கும் தெற்கு, நடராஜன் மற்றும் பத்மா, நாராயணன் மற்றும் மதராலட்சுமிஆகியவர்களுக்குப் பாத்தியப்பட்ட வீடு-களுக்கும் கிழக்கு, டவுன் சர்வே நெம்பர் 91க்கு சம்மந்தப்பட்ட தென்வடல் பொது சந்திற்கும்மேற்கு, இதன் மத்தியில் தென்புரம் கிழமேலடி 20' 6" (இருபது அடி, ஆறு அங்குலம்) வடபுரம் கிழமேலடி 20 அடி இருபது அடிகிழபுரமும்..

175/S.mat

11ம் பக்கம்நிருந்து சேர்.

ONE RUPEE
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
1ரூபாய்
१रूपया
COPY STAMP
1 Re.
ایک روپیہ

மேற்குபுரமும் தென்வடலடி 73 அடி (எழுபத்தி மூன்று அடி) இந்தளவுள்ள அடி நிலம் பூராவும் இதில் கட்டியிருக்கும் வீல்லைக் கட்டிட வகையறாக்கள் பூராவும் இவைகளிலிருக்கும் இரண்டு முன்சிபல் பைப் கனெக்ஷன் சகிதமும் இவைகளிலிருக்கும் மின்சார இணைப்புகள் சகிதமும் இந்த சொத்தின் முதிர் கழிவு நீர், மழை நீர், ஊரை நீர் வகையறாக்கள் இந்தசொத்தின் கிழபுரமுள்ள பொது சந்தில் உள்ள டிச்சியின் வழியாக ஏற்கனவே மெயின் ரோட்டிற்கு சென்றுக் கொண்டு இருப்பதைப் போலவு இனியும் போய் கொண்டிருக்க வேண்டியது. மேற்படி சொத்துகளின் நான்குபுரம் சுவர்களின் அடி நிலங்களும், சுவர்களும் சொந்த பாத்தியமும் இதற்குடோர் நெம்பர்கள் 84, டவுன் சர்வே நெம்பர்1068, வரி விதிப்பு நெம்பர் 60714, மேற்படி சொத்து சர்வே செட்டில்மெண்ட்படிக்கு வார்டு 'ஜே' பிளாக்9 டவுன் சர்வே நெம்பர் 90க்கு சம்மந்தம், மற்றும் டோர் நெ.85, டவுன் சர்வே நெம்பர்1068, வரி விதிப்பு நெம்பர்60715, மேற்படி சொத்து சர்வே செட்டில்மெண்ட்படி வார்டு (ஜே) பிளாக் 9, டவுன் சர்வே நெ.89 பூராவும் டவுன் சர்வே நெம்பர்90ல் பாகம்.

3. 55overign of Gold jewels i.e., one pair ofBangles & a Murukkuchain value Rs.10,000/-

4. Cash on hand with the defendants Rs.10,000.00

Details of costs

Cost memo notfiled by bothparties.

இன்று1997ம் ஆண்டு மார்ச் திங்கள் 26ம் நாள் இந்நீதிமன்ற இலச்சினையும், என் கையெழுத்தும் இடப்பட்டது.

ஒப்பம்/-கே.முரளி சங்கர் (ஆங்கிலத்தில்),
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேலம்.

160/2085
நகலர்: S.
படித்தவர்: P. Valin
சரிபார்த்தவர்: A. Nagaraj

/உண்மை நகல்/ 12 ஆ கடைசி பக்கம்திருத்தம் சேர்.

கண்காணிப்பாளர்.